திரு. வை. சங்கரன் : சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? அப்படி என்றால், எந்த அளவில், எங்கே தொழிற்சாலை ஆரம்பிக்கப் படும்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இதைப் பொருத்த அளவில் சிறிய ப்ளாண்ட் கூட வைக்க முடியும் என்ற அபிப்பிராயம் இல்லை எப்பொழுது, எங்கே என்பதைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

Powerlooms

* 294 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the present policy of the Government regarding introduction of powerlooms in the Handloom sector of the State?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The question of evolving a policy regarding the introduction of additional powerlooms in the handloom sector is under consideration.

திரு. வை. சங்கரன் : விசைத் தறிகள் சம்பந்தமாக இதுவரை இருந்துவந்த கொள்கைக்கும் இனி வகுக்கக்கூடிய கொள்கைக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்குமா? இதில் ஏதாவது மாறுதல் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நம்முடைய ராஜ்யத்தில் 12,500 விசைத்தறிகளில் 50 சத விகிதத்தை சொஸைடிகளுக்கும், 50 சத விகிதத்தை தனிப்பட்டவர்களுக்கும் கொடுக்கவேண்டும். அதுபற்றி டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் விரிவான அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்கப் பட்டிருக்கிறார். அவருடைய ஸ்கீம் வந்த பிறகு, அதன் மீது என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : விசைத்தறிகளை ஒதுக்கீடு செய்யும்போது, பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் நாடு திரும்பியவர்கள் கொடுத்துள்ள கோரிக்கைகளையும் கவனித்து, அவர்களுக்கும் விசைத்தறிகள் ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸினுடைய ஸ்கீம் என்ன என்று பார்த்து, எப்படி 'அலாட்' செய்யவேண்டும் என்று அவர் அபிப் பிராயம் தெரிவிக்கிறாரோ அதன்படி செய்யலாம். கனம் அங்கத் தினர் சொன்ன அபிப்பிராயமும் அவருக்கு இருந்தால் பர்மா விலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்திருப்பவர்களுக்குக் கொடுப் பதில் ஆட்சேபணை இல்லை.